[1992 மார்ச் 11

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அகஸ்தியர் கோயிலுக்கு வாகனங்களில் செல்லும் பக்தர்கள் சரணாலயப் பகுதியிலுள்ள சோதனைச் சாவடியை கடந்துசெல்வதால் அவர்களிடமிருந்து அரசு நிர்ணயம் செய்தபடி நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இப்போது இதைத் தவிர்க்கிற வகையில் அந்த சோதனைச் சாவடிகளை மாற்றியமைக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது.

முற்பகல் 10–10.

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அம்பாசமுத்திரம் தொகுதியில் பாபநாசம் அடிவாரத்தில் இருக்கிற சோதனைச்சாவடியில், அப்பகுதியில் இருக்கிற அகஸ்தியர் அருவி போன்ற அருவியில் ஏழை எளிய மக்கள் எல்லாம் குளிக்கச் செல்லும்போது கட்டணங்கள் வசூல் செய்யப்படுகிறது. அதேபோன்று கோவிலுக்கு சாமி கும்பிடப் போனாலும் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. இதை பல ஆண்டுக் காலமாக அங்குள்ளவர்கள் எதிர்த்துப் போராட்டம் செய்து வருகிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த கட்டணம் வசூலிப்பதை ரத்துச் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சோதனைச்சாவடியை பம்ப் அவுஸ் முண்டந்துறை என்ற இடத்திலே மாற்றி அமைப்பதற்காக அரசு நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறது. எதிர்காலத்தில் அகஸ்தியர் கோவிலுக்குச் செல்கின்றவர்களுக்கு அவர்களிடமிருந்து அந்த வரிகள் வசூலிக்கப்படமாட்டாது. அதற்காக நடவடிக்கை மேற்கொண்டு, சோதனைச்சாவடியை கட்டுவதற்காக தொடராச் செலவாக 22.300 ரூபாயும், வனக்காவலர்களுக்கு 3 பணியிடங்கள் கட்டுவதற்காக 53 ஆயிரம் ரூபாயும் ஏறத்தாழ 75 ஆயிரம் ரூபாய் செலவில் அது கட்டி முடிக்கப்பட்டவுடன் விரைவில் அந்த இடத்திலே மாற்றி அமைக்கப்படும். எதிர்காலத்தில் அந்தக் கட்டணம் வசூலிக்கப்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 166. திரு. கி. பாலசுப்பிரமணியன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

166—

கிராம மாணவர்கள் நகரத்திற்குச் செல்ல பேருந்து வசதி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

1992 மார்ச் 11]

*4839 திரு. கி. பாலசுப்பிரமணியன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) கிராமத்திலுள்ள மாணவர்கள் நகரத்திற்கு வந்து பயன்பெறும் வகையில் அதிக எண்ணிக்கையில் பேருந்து வசதி செய்து தரப்படுமா ?

(ஆ) பெரும்பாலும் நடுத்தர மக்கள் குறிப்பாக பெண்கள் உபயோகிக்கும் 50 சி. சிக்குட்பட்ட வாகனங்களுக்கு வருடாந்திர வரி நீக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு போக்குவரத்துக் கழகத்தில் கிராமப்புற மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அவர்கள் நகரத்திற்கு வந்து பயன்பெறும் வகையில் தேவைக்கு ஏற்றாற்போல் பேருந்து வசதிகள் அளிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டம் 1991-ன்படி (சட்ட எண் 31/91) 50 சி.சி. மற்றும் அதற்கு கீழ் உள்ள இரு சக்கரவாகனங்களுக்கு வருடாந்திர வரியை 1-10-1991 முதல் செலுத்த வேண்டியதில்லை.

திரு. கி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலுக்கு மிக்க நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறத்திலே இன்று கல்வியின் தரம் மிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலே, கிராமத்திலே இருக்கிகின்ற மாணவர்களும் உயர்கல்வி கற்பதற்காக நகரத்தைத்தான் நாடி வந்து கொண்டு இருக்கின்றார்கள். அப்படி நகரத்திற்கு வருகின்ற அவர்களுக்கு பஸ் கட்டணம் என்பது ஒரு தனியான செலவாக இருக்கின்றது. நகரத்திலே இருப்பவர்கள் சொந்த வீட்டிலே இருந்து உணவு கொண்டு வருகிறார்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி. நீங்கள் கேள்வியாகக் கேட்கவேண்டும், எப்போதும் விளக்கத்திலேயே இருக்கின்றீர்கள்.

திரு. நா. சா. பழனிசாமி : கிராமத்திலே இருந்து நகரத்திற்கு வரும் மாணவர்களுக்கு இலவசமாக பஸ் பாஸ் வழங்கி அவர்களும் நல்ல கல்வி கற்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கின்றார்கள். கிராமத்திலே இருந்து, நகரத்திற்கு பேருந்திலே பயணம் செய்வதற்கு மாணவர்களுக்கு இலவச பாஸ் வழங்கிக்கொண்டு தான் இருக்கிறோம். அதிலே ஏறத்தாழ இந்தஅரசுக்கு 24 கோடி ரூபாய் செலவாகிக்கொண்டு இருக்கிறது. கிராமத்திலே இருக்கின்ற மாணவர்கள் நகரத்திற்கு வர வேண்டும் என்பதற்காக அக்கறை எடுத்து, கிராமந்தோறும் பேருந்துகள் வசதி செய்ய வேண்டும் என்பதற்காக இந்த அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு 393 பேருந்துகள் இயக்கத்தில் இருக்கிறது. தி.மு.க. ஆட்சியிலே நிறுத்தப்பட்ட 1,205 பேருந்துகளில் இப்போது 974 பேருந்துகளை இயக்கிக்கொண்டு இருக்கிறோம் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 167. டாக்டர் வெ. புருஷோத்தமன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

167—

பென்னாகரத்தில் கூட்டுறவு நூற்பாலை.

*1058 டாக்டர் வெ. புருஷோத்தமன் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பென்னாகரம் தொகுதியில் அரசு கூட்டுறவு நூற் பாலை நிறுவும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கே இடமில்லை,